3. கவன ஈர்ப்பு.

(அ) பரமக்குடி அருகிலுள்ள மஞ்சூரில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் எஸ். சுந்தரராஜ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே மஞ்சூர் என்ற கிராமத்தில் கடந்த சில நாட்களாக அடிக்கடி தீப்பிடித்து வீடுகள் சேதம் அடைந்து வருவதால் அப்பகுதி மக்களிடையே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் இருப்பதை அப்படியே வாசியுங்கள். பிறகு, இரண்டாவதாக நீங்கள் கேளுங்கள். கவன ஈர்ப்பில் இங்கே கொடுத்து இருப்பதைப் படியுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பரமக்குடி அருகே மஞ்சூர் கிராமத்தில் அண்மையில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவது குறித்த'' அவசரப் பொது மூக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், மஞ்சூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட காலனியில் 26—3—1992 முதல் 1—4—1992 வரை 12 குடிசைகள் முழுமையாகவும் மற்றும் 5 குடிசைகள் பகுதியாகவும் எரிந்து விட்டன. தீ விபத்தில் உயிர் சேதம் ஏதும் இல்லை.

2. இத் தீவிபத்தில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ. 500ம், பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ. 250-ம் நிவாரணமாக 1—4—1992 அன்று வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, அந்த தீவிபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி நேரம் அல்லது அதற்குப்

பின்பும் மின் இணைப்பு பெறக் கூடிய வாய்ப்பு இல்லாவிடில்) ஒரு புடவை, ஒரு வேட்டி அல்லது ஒரு லுங்கி ஆகியவை நிவாரண மாக வழங்கப்பட்டுள்ளன.

3. 1992-93 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தீப்பிடிக்காத வீடுகள் இப் பகுதிகளில் கட்டிக் கொடுக்க தக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு கள் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்து தருவதாக தகவல் கொடுத்துள்ளார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 26—3—1992 முதல் 1—4—1992 வரை 12 குடிசைகள் முழுவதுமாகவும், 5 குடிசைகள் பகுதியாகவும் எரிந்துவிட்டன என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 1—4—1992-க்கு பின்னாலும், 2—4—1992 முதல் 15—4—1992 வரை—ஒரு நாளைக்கு ஒன்று, இரண்டு குடிசைகள் தொடர்ச்சியாக இதுவரை 26 குடிசைகள் எரிந்து இருக்கின்றன. ஆனால், இந்த குடிசைகள் எரிந்ததற்குக் காரணம் என்ன என்ற ஐயம் மக்களிடையே ஏற்பட்டு மக்கள் பீதியில் இன்னும் விவ சாய கூலிகள் விவசாயம் செய்ய முடியாமல் வீடுகளை பாது காத்து, பொருட்களை வெளியே எடுத்துவந்து வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

அரசின் சார்பில் அவர்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டு ஒவ்வொருவருக்கும்—முழுமையாகப் பாதிக்கப்பட்டவர் களுக்கு 500 ரூபாயும், அதோடு இலவச வேட்டி சேலையும், 5 கிலோ அரிசியும் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு, முழு மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு, வீடுகள் ஜே.வி.டி. திட்டத் தில் கட்டித் தருவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதற் கெல்லாம் காரணம் என்ன என்பதை அரசு கண்டுபிடிக்க வேண் டும். அந்தக் காரணத்தை கண்டு பிடித்து, அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யார் என்று கண்டுபிடித்தால், மக்களிடையே ஏற்பட்டிருக்கிற பீதி நீங்கும். அதற்கு அரசு என்ன செய்தி ருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அரசால் என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டிருக்கிறது என்பதில் ஒரு பகுதியை மாண்புமிகு உறுப்பி னர் அவர்களே இங்கே சொல்லியிருக்கிறார். மற்ற பகுதியை மட்டும் சொல்ல வேண்டுமென்றால், அங்கே இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக பரமக்குடி, முது குளத்தூரில் இருக்கிற தீயணைப்பு நிலையங்களில் உள்ள என் ஜின்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. போலீசால் இது பற்றி தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மூலப்பொருள் கள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதிக்கப்பட்டவர்களுக்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து உதவி செய்து வருகிறது. அது மட்டுமல்லாமல் 16 × 40 கிரில் ஷெட் அமைத்து அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடம் அளித்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், கன்ரா வங்கி மூலமாக இரண்டு மூட்டை அரிசியும், அரிசி ஆலை அதிபர்கள் மூலமாக 2 மூட்டை அரிசியும் அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியும், அங்கே நிரந்தரமாக 5 கான்ஸ்டபிள்களை அமர்த்தியும் அவர்களுக்கு தக்க பாதுகாப்பை அரசு கொடுத்து வருகிறது. அது மட்டுமல்லாமல் 17 பயர் சர்வீஸ் அலுவலர்களை அங்கே நிரந்தரமாக வைத்து பயர் சர்வீஸ் வண்டியின் மூலம் அந்த கூரைகள் மீது காலையும் மாலையும் தண்ணீர் ஊற்றி வருகிறது. அப்படியிருந்தும் கூட இன்றும் ஒவ்வொரு நாளும் 2, 3 குடிசைகள் எரிந்து கொண்டே வருகிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள் வேலைக்கு செல்லாமல் வீடுகளில் உள்ள பொருள்களை வெளியே எடுத்து வைத்து விட்டு, எந்த நேரம் நம்முடைய வீடு தீ பிடித்து எரியுமோ என்று அச்சப்படுகிற நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய குறையைப் போக்குவதற்கு சயன்டிபிக் டெஸ்ட் மூலமாக, பாஸ்பரஸ் போன்ற பொருள்களால் அந்த வீடுகள் எரிகின்றனவா அல்லது யாராவது வேண்டுமென்றே இந்தச் செயல்களைச் செய்கிறார்களா என்று கண்டுபிடித்து, அந்த மக்களுடைய பீதியைப் போக்க இந்த அரசு தீவிரமாக நடவடிக்கையெடுக்குமா? அதற்கு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவிரமாக எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரே தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பாதுகாப்பாக இருப்பதற்காக காவல் துறை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது குடிசைகள் எதுவும் எரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மன்னார்குடி, நீடாமங்கலம், பட்டுக்கோட்டை வட்டங்களில் ஏற்படும் மின் அழுத்தக்குறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கு. சீனிவாசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. சீனிவாசன்.